**செ.வெ.எண் :267** **நாள் : 21.09.2021**

**காஞ்சிபுரம் மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் பார்வையாளர் திருமதி வே.அமுதவல்லி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் மா.ஆர்த்தி அவர்கள் முன்னிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் தேர்தல் பார்வையாளர் திருமதி வே.அமுதவள்ளி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அரசு உயர்நிலை அலுவலர்களுடன் நடைபெற்றது.

மேலும் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான பணிகளுக்கு தேவையான அட்சுப் பணிகளை மேற்கொள்ள உள்ள அரசு கூட்டுறவு அச்சகத்தை மாவட்ட தேர்தல் பார்வையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணும் மையங்களான பொன்னேரிக்கரை அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை & அறிவியல் கல்லூரி மற்றும் ஸ்ரீபெரும்புதூர், தண்டலம் ஊராட்சியில் உள்ள வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரிகளுக்கு நேரில் சென்று ஊரக உள்ளாட்சி தேர்தலுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணிகளை தேர்தல் பார்வையாளர்கள் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சுதாகர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி பி.ஸ்ரீதேவி மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**